1972 டிசம்பர் 14]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அண்மையில், தந்தை பெரியார் அவர்களுடைய சிலை ஒரு குறிப்பிட்ட நகரத்தில் சேதப்படுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே ஈடுபட்டிருப்பவர்கள் மீது முறைப்படி காவல் துறையினர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மேலும் சிலையைப் பழுதுபார்த்து சீர்படுத்துவதற்கான முயற்சியை அந்த நகராட்சி மன்றத்தினரும், அந்த நகரிலுள்ள பெருமக்களும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

தொத்துநோய் சிகிச்சைக்கு தனி மருத்துவ நிலையங்கள்

*166. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொத்து நோய்களுக்கென தாலுகா தலைநகரங்களில் தனி மருத்துவ நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள மாதிரி, புயல், வெள்ளம் வருகின்ற காலத்தில், காலரா, அம்மை போன்ற தொத்து நோய்கள் பரவுவதற்கு ஏதுவாக ஆகிவிடுகிறது. ஆனால், பொது மக்களிலே பலபேர் இந்த நோய்களைத் தடுப்பதற்கு மருத்துவ மனையை அடையாமல், மாரியம்மா விடத்திலும், காளியம்மாவிடத்திலும் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, குறிப்பிட்ட முறையில், ஒவ்வொரு தாலுகா தலைநகரத்திலாவது இத்தகைய தொத்துநோய் பரவாமல் தடுக்கும் முயற்சிகளை எடுக்க அரசு இனியேனும் முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தொத்து நோய்களைப் பற்றி அடிப்படையான கருத்து, தொத்து நோய் பரவி வருகின்ற காலத்தில், மக்களுக்குத் தடுப்பு ஊசியைப் பாவலாக போடுகின்ற திட்டத்தை நிறைவேற்றுகின்ற நோக்கத்துடன்தான், அண்மையில், தஞ்சையில் ஏற்பட்ட புயலுக்குப் பின் அங்கே காலரா தடுப்பு ஊசி, ஆயிரக்கணக்கான மக்களுக்குப் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் காலரா போன்ற தொத்து நோய்க்கு ஆளானவர்கள், அந்த நோயினை மறைத்து விடுவார்களானால்

அரசாங்கம் எதும் செய்ய முடியாது. அந்த உண்மை அரசுக்குத் தெரியுமானால், அவர்களை தனியிடத்தில் வைத்து சிகிச்சை செய்ய முடியும். இப்பொழுது, ஒவ்வொரு தாலூகா மருத்துவ மனையிலும் 6 படுக்கை கொண்ட பகுதி இந்நோயாளிகளுக்காக இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக, தாலூகா தலைநகரங்களில் தனி மருத்துவ நிலையம் ஏற்படுத்துவது என்பது மிகப் பெரிய விரிவான திட்டம். அந்த அளவுக்கு நோயாளிகள் இருக்க மாட்டார்கள்.

Tuberculosis Chemotherapy Centre, Madras

* 167 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether free X-ray check-up was done by the Tuberculosis Chemotherapy Centre at Chetput, Madras during August 1972 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 1972-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் விடுதலை நாள் வெள்ளி விழா கொண்டாட்டத்தின்போது சுமார் 50 பேர்களுக்கு இலவசமாக எக்ஸ்-கதிர் படங்கள் எடுக்கப்பட்டன.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, பொருளாதார நிலையில் பின்னணியில் இருக்கும் ஏழைகளுக்கு உதவியாக மாநிலத்திலுள்ள ஏனைய பகுதிகளுக்கும் இவ்வசதி விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சில மருத்துவ மனைகளில் இந்த எக்ஸரே-கதிர் படம் எடுக்கின்ற பகுதி இருக்கிறது. அது வசதியற்ற ஏழை மக்களுக்கு இலவசமாகத்தான் இருக்கும். அதற்கான சிகிச்சை முறைப்படி நடைபெறும். ஆனால், இங்கே நடைபெற்ற வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின் அடையாளமாக சென்னையில் கெமோ தொராப்பி சென்டருக்காக செஸ்ட் இன்ஸ்டிடியூட்டில் 50 புற நோயாளிகளுக்கு கதிர்ப் படம் எடுத்துத் தரவேண்டுமென்று கேட்டார்கள். அது எடுத்து தரப்பட்டிருக்கிறது. அது வெள்ளி விழா நிகழ்ச்சியை ஒட்டி ஏழைகளுக்குச் செய்திருக்கிற சிறப்புப்பணி என்ற முறையிலே செய்யப்பட்டிருக்கிறது.